சுருக்கம்

வேளாண்மை–உழவர் நலத் துறை – தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை – அறிவிப்புகள் 2021–22 – நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா ரூ.2 கோடி நிதியில் அமைக்கப்படும் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1–1) துறை**

அரசாணை (நிலை) எண். 181

நாள் 10.11.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், ஐப்பசி 24

படிக்கப்பட்டது:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை கடித எண். எப்பிஎம் 3/3567/2021, நாள் 30.9.2021.

------

ஆணை:

28.8.2021 அன்று வேளாண்மை–உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்:–

> **"கடலும் கடல் சார்ந்த இடமுமான நாகப்பட்டினம் மாவட்ட மக்களின் வாழ்வியல் சூழல், வாழ்க்கை முறை, தாவரவளம் (மரம், செடி, கொடிகள், மலர்கள்) பழங்கள், உணவு, கலை, பண்பாடு, பறை (இசை), யாழ் ஆகியவற்றைப் பறைசாற்றும் வகையில், 2021–2022–ஆம் ஆண்டில் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா, 3.06 எக்டரில் ரூ. 2 கோடி நிதியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். இது இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் செயல்படும்."**

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் கடலும் கடல் சார்ந்த இடமான நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 7.56 ஏக்கர் பரப்பில் ரூபாய் 2.0225 கோடி நிதியில் நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நோக்கம்

1. கடலும் கடல் சார்ந்த மக்களின் வாழ்க்கை முறை, உணவு, தொழில், காலநிலை, தாவர மற்றும் விலங்கினங்கள், பொழுதுபோக்கு போன்றவற்றின் அடையாளமாக இப்பூங்கா அமையும்.

2. பல்வேறு அல்லி இனங்களுடன் கூடிய குட்டைகள் அமைத்தல்
3. நெய்தல் நிலத்திற்குரித்தான புன்னை மரம், பனை மரம், நாவல் மற்றும் தென்னை மரங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்
4. மீன் மற்றும் இதர கடல் வளங்களான பவளப்பாறை, முத்துச் சிப்பி போன்றவற்றை செடிகளால் அழகு வடிவங்களில் அமைத்தல்
5. கடல்வளம் மற்றும் மீனவர்களின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் படகு வடிவிலான இருக்கைகள் மற்றும் குவியம் அமைத்தல்

**திட்ட இனங்கள்**

இப்பூங்கா கீழ்க்கண்ட திட்ட இனங்களைக் கொண்டு அமைக்கப்பட உள்ளது:-

| வ. எண் | விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதர்ச் செடிகளை அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல், நில எழிலூட்டு வடிவமைப்புகளுக்கு ஏற்ற நில கட்டமைப்புகளை உருவாக்குதல் | 15.00 |
| 2 | நடைபாதை அமைத்தல்- பூங்காவை சுற்றிலும் உள்வட்ட நடைபாதைகள், இணைப்புப் பாதைகள் மற்றும் பாதையின் இரு மருங்கிலும் அலங்கார செடிகள், குத்துச்செடிகள் நடவு செய்து பராமரித்தல் | 57.03 |
| 3 | வேலி மற்றும் உயிர் வேலி அமைத்தல் | 10.08 |
| 4 | அழகிய நுழைவு வாயில், நுழைவுச் சீட்டு வழங்குமிடம் மற்றும் காவலர் அறை அமைத்தல் | 17.20 |
| 5 | வாகனங்கள் நிறுத்துமிடம் | 2.30 |
| 6 | பார்வையாளர்களுக்கான கழிப்பிட மற்றும் இதர வசதிகள் | 3.06 |
| 7 | மழைநீர் வடிகால் கால்வாய், பாலம், மழை நீர் சேகரிப்புக் குட்டைகள் அமைத்தல் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துதல் | 16.24 |
| 8 | உவர் நீர் குட்டைகள் அமைத்தல் | 9.63 |
| 9 | சிறுவர் விளையாட்டுப் பூங்கா, வளைவுகளுடன் கூடிய மூங்கில் குகைகள் மற்றும் பாலங்கள் | 25.65 |
| 10 | ஆங்காங்கே பார்வையாளர்கள் அமர இருக்கைகள் அமைத்தல் | 8.90 |
| 11 | அலுவலகக் கட்டிடம் | 7.00 |

| வ. எண் | விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 12 | பனைக்குடில்கள் மற்றும் பல்வேறு வடிவிலான குடில்கள்(Gazebo )அமைத்தல் | 9.86 |
| 13 | பூங்காவிற்கான மின் வசதிகள் ஏற்படுத்துதல் | 2.46 |
| 14 | புல்வெளி, மலர்ச்செடிகள், மரக்கன்றுகள் மற்றும் மூலிகைச்செடிகள், புன்னை, பனை, நாவல் போன்ற மரத்தொகுப்புகளை ஏற்படுத்துதல் | 14.34 |
| 15 | பவளப்பாறை, முத்துச் சிப்பி போன்ற வடிவிலான வடிவமைப்புகள் அமைத்தல் | 3.50 |
| | மொத்தம்* | *202.25 |

(*திட்ட மதிப்பு சரக்கு மற்றும் சேவை வரியையும் உள்ளடக்கியது)

3. மேலும், பண்ணை வரவினத்தின் மூலம் வரப்பெற்று பண்ணை வரவின கணக்கில் சுழல் நிதியாக பயன்படுத்தப்பட்டு வரும் ரூ.78.23 கோடி நிதியில், ஆண்டு செயல் திட்டத்தின் படி நடவுப்பொருட்கள் மற்றும் விதைகள் உற்பத்திக்கான இடுபொருட்கள், பண்ணைப் பணியாளர்களுக்கான ஊதியம், மின்கட்டணம், இதர செலவினங்கள், பண்ணைகள் மற்றும் பூங்காக்கள் பராமரிப்பு செலவினம், உட்கட்டமைப்புகளுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொண்டுள்ளார்.

4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் இப்பூங்காவிற்கு செயல் திட்டம் தயாரிக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் அவர்களுடன் 4.9.2021 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் இப்பொருள் குறித்து தோட்டக்கலைத் துறை, நகராட்சி நிர்வாகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் பூங்காவிற்கான செயல்பாடுகள், கட்டிடக்கலை நிபுணர் மூலம் வரைபடம் பெறப்பட்டு விவாதிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இப்பொருள் குறித்து அனைத்து விபரங்களும் தோட்டக்கலை மற்றும் மீன்வளம் – மீனவர் நலத்துறை சார்பாக செயல்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டது எனத் தெரிவித்து, வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பான "நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்கப்படும்" என்ற அறிவிப்பினை ரூ.2.0225 கோடி பண்ணை வரவின நிதியின் மூலம் செயல்படுத்த அரசாணை கோரியுள்ளார்.

5. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை ரூ.2.0225 கோடி நிதியினை பண்ணை வரவின நிதியிலிருந்து பயன்படுத்தி செயல்படுத்துமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

6. நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா அமைக்கத் தேவைப்படும் பண்ணை வரவு நிதியினை பயன்படுத்த தமிழ்நாடு

தோட்டக்கலை வளர்ச்சி முகமை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை, அரசாணை (நிலை) எண். 519, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 29.9.1997 பத்தி 13 (vi)–ல் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை–5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை–5
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை –9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

நகல்
மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சென்னை–9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலத் துறை, சென்னை–9
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம்– 611001.
நிதித்(வேளாண்–உ.ந) துறை, சென்னை–9.
வேளாண்மை–உழவர் நலத் (அநமு3 / வசெமதி) துறை, சென்னை–9
உதவி நிரலர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சென்னை–9
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.18837/தோ.க.1–1/2021
இருப்புக் கோப்பு/உதிரி.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

10.11.21
பிரிவு அலுவலர்
10.11.21
4/4